## ரஷ்ய துணை அதிபர் திமித்ரி பத்ருஷேவ் அவர்கள் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்தார்

செப்டம்பர் 25, 2025

ரஷ்ய கூட்டமைப்பின் மாண்புமிகு துணை அதிபர் திமித்ரி பத்ருஷேவ் அவர்கள், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்தார்.

2. விவசாயம், உரங்கள், உணவு பதப்படுத்துதல் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த கருத்துக்களை அவர்கள் பரிமாறினர்.

3. பிரதமர் அவர்கள் அதிபர் புட்டின் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார் மற்றும் இந்தியாவில் நடக்கும் 23வது இந்தியா-ரஷ்யா ஆண்டு உச்சி மாநாட்டில் அவரை வரவேற்க ஆவலுடன் உள்ளதாக கூறினார்.

புது தில்லி

செப்டம்பர் 25, 2025